ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# காஞ்சி வடக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பரிமளா சிட்டிபாபு வேண்டுகோள்!

தாம்பரம், ஜூலை 24- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் மணிப்பூர் கலவரத்தைத் தடுக்கத் தவறிய ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாவட்ட மகளிர் அமைப்பாளர் பரிமளா சிட்டி பாபு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தாம்பரம் சிட்லபாக்கத்தில் 24.7.2023 திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் சிட்லபாக்கம் சந்திப்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் மணிப்பூரில் நடைபெறும் வன்முறை பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களை தடுக்க தவறிய மணிப்பூர் அரசையும் ஒன்றிய அரசையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் எனது தலைமையில் (பரிமளா சிட்டிபாபு) மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மதினா பேகம் எம்.சி., மீரா சபாபதி, சந்தியா எம்.சி., அமுதா தெய்வசிகாமணி, கலைவாணி, லட்சுமி ஞானசேகர் முன்னிலையிலும் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கண்டன உரையாற்றுகிறார்.

ரமணி ஆதிமூலம் எம்.சி., கிரிஜா சந்திரன் எம்.சி., லிங்கேஸ்வரி பாபு எம்.சி., கற்பகம் சுரேஸ் எம்.சி., கல்யாணி மணிவேல் எம்.சி., புவனேஸ்வரி, நிர்மலா முனுசாமி, கே.அன்னம் மாள், பல்லாவரம் கல்யாணி, அமுதா, பூங்கோதை, தனசேகர், மீரா சீனிவாசன், பத்மா, பழனி, பி.சூர்யா, ஜி.சரஸ்வதி, கே. செல்வி, ஜி. கலா, மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடி இன மக்கள் மீது ஏவி விடப்பட்டிருக்கின்ற வன்முறை வெறியாட்டத்தை 75 தினங்களுக்கு மேலாக வேடிக்கை பார்க்கும் அதிலும் குறிப்பாக பெண்கள் மீது தொடுக்கப்படுகின்ற பாலியல் வன்புணர்வு வெறியாட்டத்தை கண்டுகொள்ளாத மணிப்பூர் அரசையும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் கண்டித்து நடைபெறப்போகின்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட மாநகர பகுதி வட்ட உட்பட்ட மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், மகளிர்கள் பெருந்திரள் கூட்டமாக மணிப்பூரில் மலரட்டும் மனிதநேயம் என்ற முழக்கத்தோடு கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் சசிகலா கார்த்திக் எம்.சி. நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை கே.வி. இராமன்

**ஜூலை 24 (2009)**



கழகம் துவங்கிய காலத்தில் நாகப்பட்டினம் நகரக் கழகத்தின் முதல் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து இருபது ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகை மாவட்டம் முழுவதும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்படுத்தியதுடன், தமிழகத்திலேயே அதிக படிப்பகங்கள் துவக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பையும் பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.

பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த இவர் 1964ஆம் ஆண்டிலேயே தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

புரசைவாக்கம் நெடுஞ்சாலை பிரதான உந்து குழாயில்

# சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இணைப்புப் பணிகள்!

## குடிநீர் விநியோகம் நிறுத்தம் - சென்னை குடிநீர் வாரியம் அறிக்கை!

சென்னை, ஜூலை 24- கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் 1050 மிமீ விட்டமுள்ள பிரதான உந்து குழாயுடன் 1000 மிமீ விட்டமுள்ள பிரதான உந்து குழாய் இணைக்கும் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 25.07.2023 அன்று காலை 10.00 மணி முதல் 26.07.2023 காலை 10.00 மணி வரை மண்டலம்-4 (தண்டையார்பேட்டை), மண்டலம்-5 (இராயபுரம்), மண்டலம்-6 (திரு.வி.க நகர்), மண்டலம்-8 (அண்ணா நகர்) மற்றும் மண்டலம்-9 (தேனாம்பேட்டை) க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்த வித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.


இவ்வாறு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அறிவித்துள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

**ஜூலை 24 (2014)**



திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.

உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

